[1991 சனவரி 24

சிறப்புச் சங்கம் பட்டுக்கோட்டையிலேதான் இயங்கி வருகிறது. எனவே அந்தச் சிறப்புக்களை முக்கியத்துவமாகக் கொண்டு தேங்காயிலிருந்து, தென்னை சார்புப் பொருள்களிலிருந்து ஃபோம்மேட், தேங்காய்ப் பவுடர் போன்ற பொருள்களைத் தயாரிக்கிற ஒரு அரசு நிறுவனத்தையோ அல்லது கூட்டுறவுத் துறை மூலமாகத் துவக்குகிற எண்ணத்தையோ அரசு மேற் கொள்ள மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பட்டுக்கோட்டைப் பகுதியில் 4 தொழிற் கூட்டுறவு கயிறு தயார் செய்யும் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சோழநாடு கயிறு தொழிற் பேட்டை, பேராவூரணி கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம், குருவிக்கரம்பை கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம், திட்டக் குடி கயிறு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற 4 கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் இதைப்போன்ற சங்கங்களை உருவாக்க வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால், கூட்டுறவுத் துறையிலேயே இதைப்போன்ற தொழிற் கூடங்களையே நம்மாலே அமைத்துத் தர முடியும்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போன்ற அந்தக் கூட்டுறவுத் துறை மூலம் துவங்க இருக்கின்ற தொழில் களுக்கு அரசு எந்தெந்த விதத்திலே உதவ முன்வரும் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசுச் சலுகைகள் எந்த அளவுக்குச் செயல்படுகிறதோ அது போலத்தான். மேலும் மத்திய கயிறு வாரியம் என்ற ஓர் அமைப்பு செயல்படுகிறது ; அந்த மத்திய கயிறு வாரியம் இதைப் போன்ற கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதி உதவி வழங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துச் செயல்படுவதில் எந்தவிதமான சிரமமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கயிறு உற்பத்தித் தொழிற்சாலைகள் பல இடங்களில் 'சிக் மில்' ஆக இருக்கின்றன. தற்சமயம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு மெத்தை, தலையணை போன்ற பொருள் களைக் கயிறு இண்டஸ்ட்ரியிலே செய்யலாம் என்று தெரிகிறது.

அதற்காக அரசு ஏற்றுமதி செய்வதற்கு, ஏற்றுமதி வாரியத்தின் மூலமாக ஏதாவது ஏற்பாடு செய்து, இந்தத் தொழிற்சாலையை முற்போக்கு செய்வதற்கு, முன்னேற்றுவதற்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் தொழிற்துறை மூலமாக நடத்தப்படுகின்ற இண்டஸ்ட்ரியல் கோவாபரேடிவ் என்று சொல்லக்கூடிய இந்தக் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங் கள் எல்லாமே சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன. 'சிக் மில்' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதாவது தனிப்பட்ட ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கம் சரியான முறையில் இயங்காமல், நஷ்டத்திலே இயங்குமேயானால் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத் துக்குக் கொண்டுவந்தால், அதை நல்ல முறையிலே இயக்குவதற் கான வாய்ப்பினை அரசு ஏற்படுத்தித் தரும். பொதுவாக கூட்டுறவு அமைப்புக்கள் நல்ல முறையிலே செயல்படாததற்குக் காரணம் அங்கு இருக்கக்கூடிய நிர்வாகக் கோளாறுகள்தான். எனவே, சமீபத்திலே தான் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பிலே அமர்ந்து இருக்கிறார்கள். எனவே, நஷ்டத்திலே இயங்குகிற அல்லது 'சிக் மில்' ஆகக் கருதப்படுகின்ற அந்தக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய விவரங்களை மாண்புமிகு உறுப்பி னர் அவர்கள் தந்தால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும். இப் போது மத்திய கயிறு வாரியம் தான் வெளிநாடுகளுக்கு கயிறு பொருள்களை ஏற்றுமதி செய்கின்ற பணியிலே ஈடுபட்டு இருக் கின்றது. நம்முடைய தொழிற் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பொருள்களைப் பெற்றுத்தான் ஏற்றுமதி செய்கிறார்கள். தமிழ கத்திலேயே கூட்டுறவு முறையில் நார்ப் பொருள்களிலிருந்து மெத்தை தயார் செய்கின்ற ஓர் அமைப்பை சமீபத்திலே தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே தொடங்கி வைத்து இருக்கின்றார்கள். எனவே, எல்லா மூலப் பொருள்களும் நல்ல முறையில் இந்தக் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் பயன்படுத்தப்படுகின்றன.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*1151 திரு. ஜி. ஜி. குருமூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பவானி ஒன்றியம், பி. மேட்டுப்பாளையம், கவுந்த பாடி மற்றும் சலங்கபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?